# கும்பகோணம் மாநகராட்சி

## அவசரக் கூட்ட அழைப்பிதழ்

## கும்பகோணம் மாமன்றம்

அன்புடையீர்,

கும்பகோணம் மாநகராட்சியின் மாமன்ற அவசரக் கூட்டம் வருகின்ற **22.01.2026 வியாழக்கிழமை காலை 11.00 மணியளவில்** கும்பகோணம் மாநகராட்சி பழைய அலுவலகத்தில் உள்ள படேல் நகர்மன்ற கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள பொருள்கள் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இடம் : கும்பகோணம்
நாள் : 21.01.2026

மேயர்
கும்பகோணம் மாநகராட்சி

இணைப்பு : பொருள்களில் நிரல்
பெறுநர் : அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்
நகல் :
1. பாராளுமன்ற உறுப்பினர், மயிலாடுதுறை
2. மாநிலங்களவை உறுப்பினர்
3. சட்டமன்ற உறுப்பினர், கும்பகோணம்
4. அனைத்து நாளிதழ்கள்

| மாநகர் மன்ற கூட்டம் நடைபெற்ற நாள் 22.01.2026 | அவசரக்கூட்ட தீர்மானம்<br>வரிசை எண் மற்றும் மாமன்ற கூட்டப்பொருள் | மாமன்ற தீர்மான எண் |
|---|---|---|
| | **பொருள் எண்.1**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவை தொகுதி எண். 06, பகுதி எண். 42, நகரளவை எண். 2125/1B, 2125/1C1, 2129/4, 2127/4, புது இரயில்வே சாலையில் கட்டப்பட்டு வரும் அண்ணா அறிவாலய வளாகத்தினுள் கட்டிட முகப்பில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைத்தல் தொடர்பாக மாநகராட்சியின் குறிப்பான பரிந்துரை (Specific Remarks) கோரப்பட்டுள்ள தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1605/2026/இ1, நாள்.12.01.2026–ல் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முழு உருவ வெண்கல சிலை அமைப்பது தொடர்பாக மாநகராட்சியின் குறிப்பான பரிந்துரை அறிக்கையினை அனுப்பி வைக்க கோரப்பட்டுள்ள கடிதம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் முழு உருவ வெண்கல சிலை நிறுவுவதற்கு மாநகராட்சி அனுமதிக்கலாம் என்பதையும் மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட நகரளவை தொகுதி எண். 06, பகுதி எண். 42, நகரளவை எண். 2125/1B, 2125/1C1, 2129/4, 2127/4, புது இரயில்வே சாலையில் கட்டப்பட்டு வரும் அண்ணா அறிவாலய வளாகத்தினுள் கட்டிட முகப்பில் முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் டாக்டர். கலைஞர் மு. கருணாநிதி அவர்களின் திருவுருவ வெண்கல சிலை அமைத்தல் தொடர்பாக மாநகராட்சியின் குறிப்பான பரிந்துரை செய்ய மாமன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 375/2026/டி1 | **286**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.2**<br>இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் 9 வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்துகொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண் 56 நாள் 30.06.2025ல் ரூ.25.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் உதவி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டு வாகனம் TN 49 AX 2929 வாகனத்தில் உள்ள பேட்டரி வாங்கி பொருத்தும் பணிக்கு மாநகராட்சி பதிவு பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து 16.06.2025 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு | 287<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது. |

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s. சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், அன்னை அஞ்சுகம் நகர், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம். | 7,080.00 |
| 2 | M/s. தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ், 1ஏ/12 பைபாஸ் ரோடு, விஜயபுரம், திருவாரூர். | 7,316.00 |
| 3 | M/s. அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ், 13 ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | 7,552.00 |

அலுவலக குறிப்பு: வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியாக ரூ.7,080/- கொடுத்துள்ள M/s. சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், அன்னை அஞ்சுகம் நகர், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம். நிறுவனத்தாரின் விலைப் புள்ளியினை ஏற்கலாம்.

பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

**ந.க. எண் 2073/2025/E3 (மையம்)**

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்.3**<br>இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் 9 வாகனங்களில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரி செய்துகொள்வதற்கு மாமன்ற தீர்மானம் எண் 56 நாள் 30.06.2025ல் ரூ.25.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்தைந்து இலட்சம் மட்டும்) நிர்வாக அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் இம்மாநகராட்சி பொறியியல் பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் நகர திட்டமிடுநர் அலுவலக பயன்பாட்டு வாகனம் TN 68 AX 2929 வாகனத்தில் உள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு மாநகராட்சி பதிவு பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து 16.06.2025 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்ட விபரப்படி பெறப்பட்ட விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்கு. | **288**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது. |

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூ. |
|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | M/s. சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்,<br>அன்னை அஞ்சுகம் நகர், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம். | 62776.00 | |
| 2 | M/s. தமிழ்நாடு அக்ரோ சர்வீஸ்,<br>1ஏ/12 பைபாஸ் ரோடு, விஜயபுரம், திருவாரூர். | 65785.00 | |
| 3 | M/s. அன்னை சத்யா இஞ்சினியரிங் ஒர்க்ஸ்,<br>13 ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர் | 68735.00 | |

அலுவலக குறிப்பு: 1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளியாக ரூ.62,776/- கொடுத்துள்ள M/s. சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ், அன்னை அஞ்சுகம் நகர், ஐந்து தலைப்பு வாய்க்கால், கும்பகோணம் நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.

ந.க. எண் 5417/2025/E3 (மையம்)

---

**பொருள் எண்.4**

தமிழ்நாட்டில் உள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் ஏழை மாணவர்களின் படிப்பினை ஊக்குவிக்கவும், ஊட்டச் சத்து குறைபாட்டினை போக்கவும், கற்றல் இடநிற்றலைத் தவிர்க்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண் 110-ன் கீழ் இம்மாநகராட்சி 9 தொடக்கப்பள்ளிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கு முதற்கட்டமாக அனைத்துப் பள்ளி வேலை நாட்களிலும் காலை வேளைகளில் சத்தான சிற்றுண்டி வழங்கப்படும் என அரசாணை நிலை எண் 43 சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை (சந-4) துறை நாள் 27.07.2022-ல் வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி இம்மாமன்ற தீர்மான எண் 790 நாள் 29.09.2023ன்படி ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுய உதவிக் குழு, கும்பகோணம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியின்படி இம்மாநகராட்சி 11 தொடக்கப்பள்ளிகள், 7 மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 4 ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் 1171 மாணவ மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கு நாள் ஒன்றுக்கு ஒரு மாணவருக்கு ரூ.10/- வீதத்தில் உணவு சமைத்து வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்சமயம் சுவாமிமலை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பயிலும் 159 மாணவ மாணவியருக்கும் சேர்த்து மொத்தம் 1256 மாணவ, மாணவியர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்பட்டு வந்தது. மேலும், மூன்றாம் கட்டமாக அரசு உதவி பெறும் 22 பள்ளிகளில் பயிலும் 2778 மாணவ மாணவியர்களுக்கு 26.08.2025 முதல் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டும் வருகிறது. ஆக மொத்தம் 44 பள்ளிகளில் பயிலும் 4034 மாணவ மாணவியர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் காலங்களில் மேற்கண்ட பள்ளிகளில் புதிதாக சேர்க்கை செய்யப்படும் பள்ளி மாணாக்கர்களுக்கும் காலை உணவு வழங்கவும் அனுமதிக்கலாம்.

இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க. எண் 17404/2022/எம்.1 நாள் 20.09.2025ம் தேதிய கடிதத்தில் காலை உணவு தயாரித்து வழங்கும் நிறுவனங்களுக்கான ஒப்பந்தக் காலம் கும்பகோணம் மாநகராட்சிக்கு 28.09.2025 அன்றுடன் முடிவடைந்ததால்

**289**
அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது.

மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 4 மாதங்களுக்கு காலநீட்டிப்பு செய்யப்பட்டு 31.12.2025 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற நான்கு ஒப்பந்தப்புள்ளிகளை கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் 2 ஒப்பந்தப்புள்ளிகள் தொழில்நுட்ப தகுதி பெறாததால் அவை நிராகரிக்கப்பட்டது. மேலும், தொழில்நுட்ப தகுதி வாய்ந்த கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ எண் | ஒப்பந்ததாரர்பெயர் திருவாளர்கள் | மதிப்பீட்டின் படிதொகை ரூ. | ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளிதொகை ரூ. | ஒப்பந்தப்புள்ளி சதவீதவிபரம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். உமாமகேஸ்வரி அருண், மேலக்காவேரி | 12.71 | 12.70 | மதிப்பீட்டை விட (–) 0.08% குறைவு |
| 2 | மெசர்ஸ். எஸ்.ஏ. ஏ. ஜென்ஸீஸ், கும்பகோணம் | 12.71 | 14.00 | மதிப்பீட்டைவிட (+) 10.15% அதிகம் |

மேலும், ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு செய்து பணி உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் பணியின் அவசியம் கருதி 01.01.2026 முதல் 19.01.2026 வரை மாணாக்கர்களுக்கு காலை உணவு வழங்கியமைக்கான தொகையினை ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு வழங்கவும் மான்றத்தின் அனுமதிக்கு.

1. அலுவலக குறிப்பு 1. மதிப்பீட்டைவிட (–)0.08% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள, M/s. உமாமகேஸ்வரி அருண், மேலக்காவேரி, கும்பகோணம் அவர்களின் ஒப்பந்தப் புள்ளியை ஏற்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொண்டதையும் மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

பணியின் அவசியம் கருதி 01.01.2026 முதல் 19.01.2026 வரை மாணாக்கர்களுக்கு காலை உணவு வழங்கியமைக்கான தொகையினை ஸ்ரீ படைவெட்டி மாரியம்மன் மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு வழங்கவும் மாமன்றம் அனுமதிக்கலாம்

**ந.க. எண் 4600 /2022/சி3**

**பொருள் எண்.5**

இம்மாநகராட்சியில் மாமன்ற கூட்டம் நடைபெற அதற்குண்டான மாமன்ற பொருள்கள் தயார் செய்ய ஏதுவாக செராக்ஸ் எடுப்பதற்கு விலைப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்கண்டவாறு மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

| வ.எண் | விவரம் | விலை ரூ. |
|---|---|---|
| 1 | R.V. COPIERS<br>No.22, Indiragandhi Salai. Kumbakonam | 2.50/– |
| 2 | BELL SYSTEMS<br>No.87. Sarangapani Keela Veethi, Kumbakonam | 2.00/– |
| 3 | SPEED SYSTEMS & XEROX<br>9/3, Sarangapani sannathi Street, Kumbakonam | 1.50/– |

**290**
அனுமதி அளிக்கப் பட்டது.

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஸ்பீடு சிஸ்டம் & செராக்ஸ் நிறுவனத்திற்கு அவசர அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கப்பட்டது. மாமன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும்

வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.

**ந.க.எண்.3005/2022/சி9**

**<u>பொருள் எண்.6</u>**

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு கீழ் இயங்கும் TN68 Z 3895 (TATA– ACE) – வாகனத்தின் பழுதுகளை சரி செய்யும் பணியை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சிவ சக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம். | 21417/– |
| 2 | தமிழ் நாடு ஆக்ரோ சர்விஸ் சென்டர், 1–A/12, பைபாஸ் ரோடு, திருவாரூர். | 29795/– |
| 3 | அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | 26019/– |

**அலுவலக குறிப்பு:**

அ) செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

(ஆ) குறைந்த விலை விகித விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ்.**சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்** தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண். 12969/ 2025 / எச்.1**

**291**
அனுமதி அளிக்கப் பட்டது.

**<u>பொருள் எண்.7</u>**

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவு கீழ் இயங்கும் TN68 f 1698 (Tipper) – வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய மாமன்ற தீர்மானம் எண்.271 நாள்.28.11.2025ல் நிர்வாக சரி செய்யும் பணியை மேற்கொள்ள ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் அனுமதிக்காக பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை(ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சிவ சக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம். | 254054/– |
| 2 | தமிழ் நாடு ஆக்ரோ சர்விஸ் சென்டர், 1–A/12, பைபாஸ் ரோடு, திருவாரூர். | 269984/– |
| 3 | அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13, ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | 262196/– |

**அலுவலக குறிப்பு**

(அ)செலவினம் வருவாய் நிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

(ஆ) குறைந்த விலை விகித விலைப்புள்ளி கொடுத்துள்ள

**292**
அனுமதி அளிக்கப் பட்டது.

மெசர்ஸ், **சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்** தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

**ந.க.எண். 9576/ 2025 / எச்.1**

---

**<u>பொருள் எண்.8</u>**

இம்மாநகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் கீழ் இயங்கும் TN68 F 1726 (**TIPPER LORRY**) – வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய பணியின் அவசியம் கருதி ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி தொகை (ரூபாயில்) |
|---|---|---|
| 1 | சிவ சக்தி ஆட்டோ ஒர்க்ஸ், தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம். | 23600/- |
| 2 | தமிழ் நாடு ஆக்ரோ சர்விஸ் சென்டர், 1-A/12, பைபாஸ் ரோடு, திருவாரூர். | 34810/- |
| 3 | அன்னை சத்யா இன்ஜினியரிங் ஒர்க்ஸ், 13,ராம்கே ரோடு, சங்கம் தியேட்டர் அருகில், திருவாரூர். | 29854/- |

**அலுவலக குறிப்பு:** (அ) அனுமதி அளிக்கலாம்,
(ஆ)குறைந்த விலை விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ், **சிவசக்தி ஆட்டோ ஒர்க்ஸ்** தனலெட்சுமி நகர், மயிலாடுதுறை ரோடு, கும்பகோணம் நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.
**(இ) பணியின் அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.**

**ந.க.எண். 13375/ 2025 / எச்.1**

293
**அனுமதி அளிக்கப் பட்டது.**

---

**<u>பொருள் எண்.9</u>**

கும்பகோணம் மாநகராட்சி பகுதியில், அரசின் வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் அரசாணை (நிலை) எண்.390 பொது (முதல்வரின் முகவரி துறை) நாள்.19.06.2025–ன் படி நகர்புறங்களில் பொதுமக்கள் முகாம் குறித்து தெரிந்துக்கொள்ளும் பொருட்டு விளம்பரப்படுத்த மதிப்பிற்குரிய ஆணையர் அவர்களின் 09.07.2025ம் தேதி நிர்வாக அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கு முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

**294**
**அனுமதி அளிக்கப் பட்டது.**

| வ. எண் | பணியின் பெயர் | லெட்சுமி ஆர்ட்ஸ் கும்பகோணம் | ஸ்ரீனிவாஸ் அட்வடைஸ் மெண்ட் சர்வீஸ் பாபநாசம் |
|---|---|---|---|
| 1. | Back Light Road Show Van (15.07.2025 to 31.10.2025) | 249600 | 331344 |
| 2. | Led road Show (per day) | 13000 | 14000 |
| 3. | Recording Cost | 32000 | 47200 |
| 4. | TATA Ace Van Fabrication cost | 6000 | 7080 |
| | மொத்தம் | **354708** | **406704** |

அலுவலக குறிப்பு:

அ) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள லெட்சுமி, கும்பகோணம் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று அவசர அவசியம் கருதி பணி உத்திரவு வழங்கியமைக்கு மாமன்றம் அங்கீகரிக்கலாம்.

ஆ) உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடத்துவதற்கு பெறப்பட்ட நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள அனுமதியளிக்கலாம்.

ந.க. எண்.6173/2025/சி1

**பொருள் எண்.10**

கும்பகோணம் மாநகராட்சிக்கு சொந்தமான கரிக்குளத்தில் அமைந்துள்ள STP– க்கு Gas Chlorination கொள்முதல் செய்யும் பணிக்கு. ரூ. 1.50 இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மாமன்ற தீர்மான எண் 135 நாள் 29.07.2025 அன்று அனுமதி பெற்ற பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 12.11.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்

| வ.எண் | ஒப்பந்ததாரரின்பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ, | ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ, | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | திரு. ஆர்.அசோக் குமார் கும்பகோணம் | 90624.00 | 90610.41 | மதிப்பீட்டை விட (–) 0.02 % குறைவு |
| 2 | மெசர்ஸ் .செல்வா கன்ஸ்ட்ரக்சன் | 90624.00 | 92889.60 | மதிப்பீட்டைவிட (+) 2.52 %அதிகம் |

**295**

அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது.

| | | |
|---|---|---|
| | **அலுவலககுறிப்பு**<br>1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025-2026 ன் கீழ் செலவு செய்யலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-)0.02% குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர் அசோக்குமார் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்<br>ந.க.எண். 7219 /2025/E2a | |
| | **பொருள் எண்.11**<br>கும்பகோணம் மாநகராட்சி எல்லைக்குப்பட்ட கரிக்குளம் கழிவுநீர் (STP) சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிக்கு. ரூ. 48.00 இலட்சம் (ரூபாய் நாற்பத்து எட்டு இலட்சம் மட்டும்) மாமன்ற தீர்மான எண் 248 நாள் 30.09..2025 அன்று அனுமதி பெற்ற பின்பு மாநகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களிடமிருந்து 12.11.2025 இல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><table><tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரரின் பெயர்</th><th>மதிப்பீட்டுத்தொகை ரூ,</th><th>ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ,</th><th>குறைவு / அதிகம்</th></tr><tr><td>1</td><td>மித்தேஸ் கன்ஸ்ட்ரக்சன் கும்பகோணம்</td><td>3880548.00</td><td>3878424.00</td><td>மதிப்பீட்டை விட(-) 0.05% குறைவு</td></tr><tr><td>2</td><td>ஏபி. பில்டர்ஸ் கும்பகோணம்</td><td>3880548.00</td><td>3884796.00</td><td>மதிப்பீட்டைவிட (+) 0.11 % அதிகம்</td></tr></table><br>**அலுவலககுறிப்பு**<br>1. மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகையை குடிநீர் மற்றும் வடிகால் நிதி 2025-2026-ன் கீழ் செலவு செய்யலாம்.<br>2. வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட (-)0.05% குறைவாக கொடுத்துள்ள மித்தேஸ் கன்ஸ்ட்ரக்சன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம் .<br>ந.க.எண். 9283 /2025/E2 | **296**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்.12**<br>இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 48 எண்ணிக்கை வார்டுகளாகவும், 4 மண்டலங்களாகவும் உள்ளது. இவற்றில் 2, 3 மற்றும் 4ல் உள்ள மண்டலங்களில் உள்ள பொதுமக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் 19 எம்.எல்.டி.யும், மண்டலம் எண் 1ல் உள்ள பொதுமக்களுக்கு 2 எம்.எல்.டி-யும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.<br>இம்மாநகராட்சிக்கென குடிநீர் ஆதாரம் கொள்ளிட ஆற்றில் குடிதாங்கி மற்றும் காவற்கூடத்தில் அமைந்துள்ளது. குடிதாங்கி New Connector Well-ல்உயர் மின்னழுத்த மின் இணைப்பு பெறப்பட்டு 400 KVA Transformer-2 Nos., 180 HP VT பம்புகளும், 3 எண்ணிக்கை 15 HP Submersible மோட்டார்களும், இவற்றிற்கு Starter களும், மின் சப்ளை தடைபடும் நேரங்களில் இயங்குவதற்கென 250 கே.வி.ஏ., ஜெனரேட்டர்களும்உள்ளன.<br>குடிதாங்கி Old Well-ல் உயர் மின்னழுத்த மின் இணைப்பு பெறப்பட்டு இவற்றிற்கென 315 கே.வி.ஏ., Transformer-2 Nos. களும், 75 HP VT Motor 3 எண்ணிக்கையும், கொள்ளிடஆற்றில் Infiltration Well-ல் 5 எண்ணிக்கை 15 HP மோட்டார் பம்பு செட்டுகளும், போர்வெல்லில்15 HP Submersible Motor Pumpset 5 | **297**<br>அலுவலக குறிப்பை ஏற்று அனுமதி அளிக்கப் பட்டது. |

Nos. களும், இவற்றிற்கு தனித்தனியாக Starter களும் உள்ளன. மேலும், மின்தடை ஏற்படும் போது மின் மோட்டார் பம்பு செட்டுகள் இயக்க 320 கே.வி.ஏ., ஜெனரேட்டர்களும்உள்ளன.

வலையப்பேட்டை நீருந்து நிலையத்தில் உயர் மின்னழுத்த மின் இணைப்பு பெறப்பட்டு 315 கே.வி.ஏ., டிரான்ஸ்பார்மர்-1 Nos., 250 கே.வி.ஏ.,டிரான்ஸ்பார்மர்-2 Nos., 125 HP VT Motor பம்பு செட்டு-3 எண்ணிக்கையும், மண்டலம் -3, தாராசுரம் பகுதிகளுக்கென 1 எண்ணிக்கை 15 HT Motor பம்பு செட்டுகளும், மின்தடை ஏற்படும் போதுமின் மோட்டா ர்பம்பு செட்டுகள்இயங்க 320 கே.வி.ஏ., ஜெனரேட்டர் 1 No. உள்ளது.

வலையப்பேட்டை பழைய Pumping Station-ல் 60 HP submersible Motor Pumpsetஉள்ளது.

காவற்கூடத்தில் 30 HP Motor Pumpset-கள் 2 எண்ணிக்கையும், 7.5 HP Motor pumpset-கள் 4 எண்ணிக்கையும், தாராசுரத்தில் 10 HP Motor pumpset-கள் 1 எண்ணிக்கையும், 5 HP Motor Pumpset-கள் 1 எண்ணிக்கையும்உள்ளன.

இவற்றிலிருந்து பெறப்படும்குடிநீரானது கீழ்க்கண்ட இடங்களில் உள்ள மேல்நிலை நீர் தேக்க தொட்டிகளில் ஏற்றி தினந்தோறும் விநியோகம் செய்யப்படுகின்றது.

| | | | |
|---|---|---|---|
| 1 | பேட்டை-1 | 9.00 | இலட்சம் லிட்டர் |
| 2 | பேட்டை-2 | 9.00 | இலட்சம் லிட்டர் |
| 3 | மேலக்காவேரி-1 | 7.50 | இலட்சம் லிட்டர் |
| 4 | மேலக்காவேரி-2 | 4.50 | இலட்சம் லிட்டர் |
| 5 | ஏ.ஆர்.ஆர். ரோடு | 2.50 | இலட்சம் லிட்டர் |
| 6 | காமராஜ்மார்க்கெட் | 10.00 | இலட்சம் லிட்டர் |
| 7 | மணிக்கூண்டு | 4.50 | இலட்சம் லிட்டர் |
| 8 | பழையபேருந்துநிலையம் | 10.00 | இலட்சம் லிட்டர் |
| 9 | மாட்டுக்கொட்டகை-1 | 10.00 | இலட்சம் லிட்டர் |
| 10 | மாட்டுக்கொட்டகை-2 | 10.00 | இலட்சம் லிட்டர் |
| 11 | ஸ்ரீநகர்காலனி | 5.00 | இலட்சம் லிட்டர் |
| 12 | இளங்காநகர் | 1.00 | இலட்சம் லிட்டர் |
| 13 | சீனிவாசாநகர் | 5.00 | இலட்சம் லிட்டர் |
| 14 | கலைஞர்காலனி | 4.00 | இலட்சம் லிட்டர் |
| 15 | கலைஞர்காலனி | 2.00 | இலட்சம் லிட்டர் |
| 16 | நியூலெட்சுமிநகர் | 1.00 | இலட்சம் லிட்டர் |
| 17 | பொன்னியம்மன்கோவில் | 1.00 | இலட்சம் லிட்டர் |
| | **மொத்தம்** | 96.00 | **இலட்சம் லிட்டர்** |

மேற்கண்ட இடங்களில் உள்ள மின் மோட்டார் பம்ப் செட்டுகளை இயக்கவும் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நீர் ஏற்றி விநியோகிக்கவும் போதிய தொழில் நுட்பபணியாளர்கள், இம்மாநகராட்சியில் இல்லாததாலும் இப்பணியானது கடந்த பதினைந்து ஆண்டுகளாக ஒப்பந்த பணியாளர்கள் மூலம் இயங்கப்படுவதாலும் இவ்வாண்டும் மார்ச் 2026 முதல் ஆகஸ்ட் 2026 வரையான 6 மாத காலத்திற்கு பின்கண்டவாறு இயக்கி பராமரிக்க பணியாளர்கள் தேவைப்படுகின்றன.

**குடிதாங்கி New Connection Well**

- மின்பணியாளர்கள் – 3எண்ணிக்கை
- பராமரிப்புபணியாளர்கள் – 2 எண்ணிக்கை

**குடிதாங்கி Old Well**

- மின்பணியாளர்கள் – 2எண்ணிக்கை
- பராமரிப்புபணியாளர்கள் – 3 எண்ணிக்கை

**வலையப்பேட்டைநீரேற்றுநிலையம்**

- மின்பணியாளர்கள் – 2எண்ணிக்கை
- பராமரிப்புபணியாளர்கள் – 3 எண்ணிக்கை

**பழையவலையப்பேட்டைநீரேற்றுநிலையம்**

- பராமரிப்புபணியாளர்கள் – 2 எண்ணிக்கை

**காவற்கூடம்**

- மின்பணியாளர்கள் – 2 எண்ணிக்கை
- பராமரிப்புபணியாளர்கள் – 3 எண்ணிக்கை

**தாராசுரம்தரைமட்டதொட்டி**

- பராமரிப்புபணியாளர்கள் – 2 எண்ணிக்கை

மேற்கண்ட தலைமை நீரேற்று நிலையங்கள் மற்றும் நீர் உந்து நிலையங்கள் மின் மோட்டார் பம்ப் செட்டுகளை இயக்க எண்ணிக்கை மின்பணியாளர்களும் 15 எண்ணிக்கை பராமரிப்பு உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்.

இம்மாநகராட்சியின் பணியாளர்கள் இரண்டு எண்ணிக்கை மேற்கண்ட இடங்களில் பணிபுரிவதால் மீதம் 9 எண்ணிக்கை மின்பணியாளர்கள் 15 எண்ணிக்கை பராமரிப்பு உதவியாளர்களும் தேவைப்படுகின்றனர்.

குடிநீர்மேல் நிலைநீர்தேக்க தொட்டிகளில் பணி புரிய கீழ்க்கண்டவாறு பராமரிப்பு உதவியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

| வ. எண் | நீர்த்தேக்கத் தொட்டி | கொள்ளளவு | பராமரிப்பு பணியாளர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | பேட்டை–1 | 9.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 2 | பேட்டை–2 | 9.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 3 | மேலக்காவேரி–1 | 7.50 இலட்சம் லிட்டர் | 2 |
| 4 | மேலக்காவேரி–2 | 4.50 இலட்சம் லிட்டர் | 2 |
| 5 | ஏ.ஆர்.ஆர். ரோடு | 2.50 இலட்சம் லிட்டர் | 2 |
| 6 | காமராஜ்மார்க்கெட் | 10.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 7 | மணிக்கூண்டு | 4.50 இலட்சம் லிட்டர் | 2 |
| 8 | பழையபேருந்துநிலையம் | 10.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 9 | மாட்டுக்கொட்டகை–1 | 10.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 10 | மாட்டுக்கொட்டகை–2 | 10.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 11 | ஸ்ரீநகர்காலனி | 5.00 இலட்சம் லிட்டர் | 2 |
| 12 | இளங்காநகர் | 1.00 இலட்சம் லிட்டர் | 1 |
| 13 | சீனிவாசாநகர் | 5.00 இலட்சம் லிட்டர் | 1 |
| 14 | கலைஞர்காலனி | 4.00 இலட்சம் லிட்டர் | 1 |
| 15 | கலைஞர்காலனி | 2.00 இலட்சம் லிட்டர் | 1 |
| 16 | நியூலெட்சுமிநகர் | 1.00 இலட்சம் லிட்டர் | 1 |
| 17 | பொன்னியம்மன்கோவில் | 1.00 இலட்சம் லிட்டர் | 1 |
| | **மொத்தம்** | **96.00 இலட்சம் லிட்டர்** | **28** |

மேற்கண்ட பராமரிப்பு உதவியாளர்களில் 28 எண்ணிக்கைகளில் இம்மாநகராட்சி பணியாளர்கள் 8 பேர் பணி பார்த்து வருகின்றனர். மீதம் 20 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

1. மின்பணியாளர்கள் –9 எண்ணிக்கை
2. பராமரிப்புஉதவியாளர்கள் –15 எண்ணிக்கை
3. பராமரிப்புஉதவியாளர்கள் –20 எண்ணிக்கை

**மொத்தம் –44 எண்ணிக்கை**

| | | | |
|---|---|---|---|
| | மேற்படி பராமரிப்பிற்கு 6 மாத காலத்திற்கு (மார்ச் 2026 முதல் ஆகஸ்ட் 2026 வரை) தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.54.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மாமன்றத்தின்அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலககுறிப்பு: 1. மதிப்பீடுதொகை ரூ.54.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.<br>2. இச்செலவீனத்தினை மாநகராட்சி குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>ந.க. எண்:3954/2023/இ3 | | |
| | **பொருள் எண்.13**<br>கும்பகோணம் மாநகராட்சி குடிதாங்கி தலைமை நீரேற்று நிலையம் மற்றும் காவற்கூடம், தாராசுரம் ஆகியவற்றில் உள்ள மோட்டார்கள் மற்றும் பம்புசெட்டுகள் மற்றும் மின்மாற்றிகள், 17 எண்ணிக்கையிலான குடிநீர் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் 5 மாதங்களுக்கு (செப்டம்பர் 2025 முதல் ஜனவரி 2026 வரை) இயக்கி பராமரிக்கும் பணியினை ரூ.54.00 இலட்சத்தில் மேற்கொள்ள இம்மாமன்ற தீர்மான எண் 157 நாள் 29.07.2025ல் அனுமதி அளித்துள்ளதன் அடிப்படையில் மேற்படி பணிக்கு 25.08.2025 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த திருவாளர்கள் ஏ.பி., பில்டர்ஸ் நிறுவனத்தாருக்கு 29.08.2025 அன்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியின் காலம் ஜனவரி 2026 உடன் முடிவடையும் நிலையில், பணியில் சேமிப்புத் தொகை உள்ளதால், (பிப்ரவரி 2026) ஏற்கனவே வேலை உத்தரவு வழங்கப்பட்டு இப்பணியினை மேற்கொண்டு வரும் திருவாளர்கள்.ஏ.பி.,பில்டர்ஸ் நிறுவனத்திற்கு ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ள விலை விகிதத்திலேயே செய்து வர ஒரு மாத காலம் கால நீட்டிப்பு செய்து பணியினை மேற்கொள்ள மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மாமன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>**ந.க. எண் 3954-1/2023/E3** | **298**<br>**அனுமதி அளிக்கப் பட்டது.** | |

**மேயர்**
**கும்பகோணம் மாமன்றம்**